# குறுந்தொகைத் தலைவனின் ஆளுமைத்தன்மை

# Kurunthogai Thalaivanin Aalumaithanmai

***முனைவர் எச். ஷோபனா***
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*அரசு கலைக்கல்லூரி, உதகமண்டலம்*

**Dr. H. Shobhana**
*Assistant Professor, Tamil Department*
*Government Arts College, Udhagamandalam*

***ல. சாலினி***
*தமிழ்த்துறை, முனைவர் பட்ட ஆய்வாளர்*
*அரசு கலைக்கல்லூரி, உதகமண்டலம்*

**L. Salini**
*Research Scholar, Tamil Department*
*Government Arts College, Udhagamandalam*

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க அக இலக்கியங்களுள் நல்ல குறுந்தொகை என்று சிறப்பிக்கப்படும் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள அக மாந்தர்களின் மனவோட்டங்கள் அவர்தம் கூற்று அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட சுழலை மையமாகக் கொண்டு பதிவாகியுள்ளன. அகமாந்தர் கூற்றுக்களுள் தலைவன் கூற்றுப் பாடல்கள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இக்கட்டுரை குறுந்தொகைத் தலைவனின் ஒட்டுமொத்த மனநிலைகளையும், அவனது கூற்று நிகழ்நிலைகளையும் ஆராய்ந்துள்ளது.*

***முக்கியச் சொற்கள்***

*குறுந்தொகை, தலைவன் கூற்றுப் பாடல்கள், குறுந்தொகை நானூறு, குறுந்தொகை தலைவன்*

**Abstract**

*The mental expressions of the agamanthargal in the Kurunthogai, which is regarded as a good sum of the Sangam literature, are recorded based on their claim, focusing on a particular situation. Of the Agamantar's statements, only the songs of the leader's statement have been taken up for study. This article examines the overall moods of the chief of the small population and the currentities of his statement.*

***Keywords:***

*Short Story, Thalaivan Koothu Padalgal, Kurunthogai Nanooru, Kurunthogai Thalaivan*

**Citation**

Shobhana, H., and L. Salini. “Kurunthogai Thalaivanin Aalumaithanmai.” *Journal of Tamil Culture and Literature,* vol. 2, no. 3, 2023, pp. 20–29.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20135856*

**குறுந்தொகை அறிமுகம்**

*“குறுகிய அடிகளையுடைய பாடல்களின் தொகுப்பு குறுந்தொகை எனப்படும். குறைந்த அளவு 4 அடிகளாகவும், மிகுதியான அளவு 8 அடிகளாகவும் உள்ள பாடல்கள் குறுந்தொகை நானூறு என்றழைக்கப்படுகிறது” (தமிழ் இலக்கிய வரலாறு சி.பா- ப.40)*

***“இறையினார் களவியல் உரையாசிரியர் குறுந்தொகை நானூறு என்று இந்நூலைக் குறிப்பிடுகிறார்”***

***(குறுந்-மூலமும் உரையும் - g-xxxvii)***

*ஆயினும் கடவுள் வாழ்த்து உள்பட 402 பாடல்கள் உள்ளன. “307, 391 ஆகிய இரு பாடல்கள் மட்டும் ஒன்பது அடிகளையுடையனவாய் உள்ளன. எட்டுத் தொகை நூல்களுள் முதலாவது தொகுப்பெற்றது குறுந்தொகை ஆகும். இதனைத் தொகுப்பித்தவர் பூரிக்கோ ஆவார். குறுந்தொகையினை 205 புலவர்கள் பாடியுள்ளனர். உரையாசிரியர்களால் மிகுதியாக எடுத்தாளப் பெற்ற நூலாகக் குறுந்தொகை காணப்படுகிறது.*

*முதன்முதலில், குறுந்தொகை 1915-இல் திருக்கண்ணபுரத்தலத்தான் சௌரிபெருமாள் அரங்கன் என்பவரால் பதிக்கப்பெற்றுள்ளது. பின்பு மூலம் மட்டும் கா. நமச்சிவாராயாலும், உரையுடன் 1930-இல் இராமரத்தின ஐயராலும், 1933-இல் அருணாச்சல தேசிகரால் மூலம் மட்டும் பதிக்கப்பெற்றன. தெளிவான விளக்கவுரையுடன் கூடிய பதிப்பை உ.வே.சாமிநாத ஐயர் 1937-இல் வெளியிட்டார். 1 முதல் 380 பாடல்களுக்கும் பேராசிரியரும், இறுதி 20 பாடல்களுக்கு நச்சினியார்க்கினியரும் உரை எழுதியதாகக் குறிப்புகள் உள்ளன. ஆனால் அவ்வுரைகள் கிடைக்கவில்லை.*

***“பிற்கால இலக்கண உரையாசிரியர்கள், குறுந்தொகைப் பாடல்களையே மற்றத் தொகை நூற் பாடல்களைவிடப் பெரிதும் எடுத்தாண்டிருக்கிறார்கள். முதல் 380 பாட்டுகளுக்குப் பேராசிரியரும் இறுதிப் பாட்டுகளுக்கு நாச்சினார்க்கினியரும் உரை கண்டமை தெரிய வருகிறது” என்கிறார்.***

***(தமிழ் இலக்கிய வரலாறு- ப.40)***

*இப்பொழுது அப்பழைய உரைகள் கிட்டவில்லை. “புறத்தே தோன்றும் காட்சிகளைச் செய்யுள்களிற் புனைந்து காட்டுவதை விட அகத்தே தோன்றும் காட்சிகளை உணர்ச்சியும் மெய்ப்பாடும் தோன்றும் படியாக உரைக்கும் ஆற்றல் மிகவும் சிறந்தது. இச்சிறப்புக்குச் சான்று பகர்வனவாய்க் குறுந்தொகைப் பாடல்கள் இனிமையும் எளிமையும் கொண்டு விளங்குகின்றன. இச்செய்யுள்களில் காணப்படுகின்ற தலைவன் தலைவியரிடையே வளரும் அன்பு, நிலை அவர் இல்லறம் நடத்தும் முறைமை முதலியன அனைவரையும் செம்மைப்படுத்தும் தன்மையுடையன. குறுந்தொகைப் பாடல்களில் இயற்பெயரும், சிறப்புப்பெயரும் ஒருங்கே அமைந்த புலவர்களான ஐந்து புலவர்களும், தங்கள் பாடலில் கூறிய உவமை நயத்தால் பெயர் பெற்றவராய்ப் பதினெண்மரும் காணப்படுகின்றனர். பரணர் பாடும் பாடல்கள் பெரும்பாலானவற்றில் அரிய வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன.*

*1915-இல் திருகண்ணாபுரம், திருமாளிகைச் சௌரிபெருமாள் அரங்கனார் என்பவர், திணைக்குறிப்புகளுடன் உரையில்லாத பாடல்களுக்குப் புதிய உரை தந்து குறுந்தொகையைப் பதிப்பித்தார். “1937-இல் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் குறுந்தொகை மூலமும்*

*உரையும் என இந்நூலை மிகச்சிறந்த ஓர் ஆராய்ச்சிப் பதிப்பாக வெளியிட்டார்' (குறுந்-மூலமும் உரையும் ப-xxxvii)*

*1949-இல் மகாவித்வான் ரா. ராகவையங்கார் குறுந்தொகையின் முதல் 111 பாடல்களுக்குத் தம் நுண்மாண் நுழைபுலத்தால் ஆய்ந்து கண்ட விளக்கவுரை குறுந்தொகை விளக்கம் என்னும் நூலாக அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாகத் தோன்றியது.*

*திணை அடிப்படையில் தலைவன் கூற்றுப் பாடல்களின் எண்ணிக்கை*

| வ.எண் | திணை | பாடல் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | குறிஞ்சி | 35 |
| 2 | முல்லை | 6 |
| 3 | மருதம் | 1 |
| 4 | நெய்தல் | 3 |
| 5 | பாலை | 17 |
| மொத்தப்பாடல்கள் | | 62 |

**குறுந்தொகை தலைவன்**

*அகத்திணை மாந்தருள் தலைவனுக்கென தனிச் சிறப்பிடம் உண்டு. தலைவியின் பால் அன்புவயப்பட்டவன் தலைவன். தலைவியுடனிருக்கும் போதும், பொருள்வயிற் பிரிந்த போதும் அவன் மனம் முழுவதும் நிறைந்திருப்பது தலைவியின் நினைவு தான்.*

*களவுக்காலத்தில் மடலூர்ந்தாவது தலைவியை அடைந்துவிட வேண்டும் என்று துடிக்கும் இன்பநாட்டமுடையவனாகவும், பாங்கன் இடித்துரைத்த விடத்து, தன் காதலின் உறுதியை எடுத்துரைப்பவனாகவும் கற்புக் காலத்தில் பொருள் நாட்டம் கொண்டு செலவு மேற்கொள்பவனாகவும், பிரிந்தவிடத்து தலைவியை நினைத்து வருத்தமுறுபவனாகவும், வினைமுற்றியதும் விரைந்து வந்து தலைவியைச் சந்திக்கும் துடிப்பு மிக்கவனாகவும், தலைவியைக் கண்டதும் பெருமகிழ்ச்சி அடைபவனாகவும் பல்வேறுப்பட்ட மனநிலைகளில் அவனது கூற்றுகள் இடம்பெற்றுள்ளன.*

*தலைவன் தன் கூற்றாலும், கூற்றை முன்னிலைப்படுத்தும் முறையாலும், அஃறிணைப் பொருள்களை விளித்துப்பேசும் பாங்காலும், உவமைகளைப் பயன்படுத்தி விளக்கும் திறமையாலும், அவனது மன உணர்வுகள் வெளிப்பட்டு நிற்கின்றன.*

*தோழியை இரந்து பின்னிற்றல், மடல்வலித்தல், தன்னை இடித்துரைத்த பாங்கனுக்குத் தன் மனநிலையைத் தெளிவுப்படுத்துதல், பிரிவு வலித்தல், செலவழுங்குதல், இடைச்சுரத்து நின்று வருந்துதல், வினைமுற்றி மீளுதல் ஆகிய சுழல்களில் சுழலுக்கேற்பத் தலைவனின் மனநிலை மாறுகிறது. தலைவனின் மாறுபடும் மனநிலையை அவனது கூற்றைக் கண்டு உய்த்துணர முடிகிறது.* ?

**தலைவனின் கூற்று வெளிப்படும் சூழல்கள்**

1. புணர நின்ற தலைவன்
2. புணர்ந்து நின்ற தலைவன்
3. அல்லல் குறியினால் நீங்கும் தலைவன்
4. தோழியை இரந்து பின் நின்ற தலைவன்
5. இடித்துரைக்கும் பாங்கன் முன் தலைவன்
6. மடல் வலித்த தலைவன்
7. பிரிவு வலித்த தலைவன்
8. இடைச்சுரத்து நின்ற தலைவன்
9. வினைமுற்றி மீளும் தலைவன்
10. வினைமுற்றிப் புகுந்த தலைவன்

எனப் பல்வேறு சுழல்களில் தலைவன் கூற்று அமையப்பெற்று அவனது மனநிலைகளைப் பிரதிபலித்துக் காட்டுகிறது.

திணை அடிப்படையில் தலைவன் கூற்றுப் பாடல்களில் மனிதமன ஆளுமையின் உள்ளமைப்பு நிலை அட்டவணை

**குறிஞ்சித்திணை**

| வ. எண் | பாடல் எண் | ஆசிரியர் பெயர் | மனிதமன ஆளுமையின் உள்ளமைப்பு நிலை |
|---|---|---|---|
| 1 | 14 | தொல் கபிலர் | பண்படா உள்ளம் |
| 2 | 17 | பேரெயின் முறுவலார் | பண்படா உள்ளம் |
| 3 | 29 | ஔவையார் | பண்படா உள்ளம் |
| 4 | 32 | அள்ளர் நன்முல்லையார் | பண்படா உள்ளம் |
| 5 | 40 | செம்புலப்பெயல் நீரார் | பண்படா உள்ளம் |
| 6 | 58 | வெள்ளிவீதியார் | பண்படா உள்ளம் |
| 7 | 62 | சிறைக்குடி ஆந்தையார் | பண்படா உள்ளம் |
| 8 | 70 | ஓரம்போகியார் | பண்படா உள்ளம் |
| 9 | 72 | மள்ளனார் | பண்படா உள்ளம் |
| 10 | 95 | கபிலர் | பண்படா உள்ளம் |
| 11 | 100 | கபிலர் | பண்படா உள்ளம் |
| 12 | 101 | பரூஉ மோவாய்ப்பதுமன் | பண்படா உள்ளம் |
| 13 | 116 | இளங்கீரன் | பண்படா உள்ளம் |
| 14 | 119 | சக்தி நாதனார் | பண்படா உள்ளம் |
| 15 | 120 | பரணர் | பண்படா உள்ளம் |
| 16 | 129 | கோப்பெருஞ்சோழன் | பண்படா உள்ளம் |
| 17 | 132 | சிறைக்குடி ஆந்தையார் | பண்படா உள்ளம் |
| 18 | 136 | மிளைப்பெருங்கந்தன் | பண்படா உள்ளம் |

| | | | |
|---|---|---|---|
| 19 | 142 | கபிலர் | பண்படா உள்ளம் |
| 20 | 156 | பாண்டியன் ஏனாதி நெடுங் கண்ணன் | பண்படா உள்ளம் |
| 21 | 165 | பரணர் | பண்படா உள்ளம் |
| 22 | 173 | மதுரைக் காஞ்சிப்புலவர் | பண்படா உள்ளம் |
| 23 | 182 | மடல் பாடிய மாதங்கீரன் | பண்படா உள்ளம் |
| 24 | 199 | பரணர் | பண்படா உள்ளம் |
| 25 | 206 | ஐயூர் முடவன் | பண்படா உள்ளம் |
| 26 | 222 | சிறைக்குடி ஆந்தையார் | பண்படா உள்ளம் |
| 27 | 276 | கோழிக்கொற்றன் | பண்படா உள்ளம் |
| 28 | 280 | நக்கீரர் | பண்படா உள்ளம் |
| 29 | 286 | எயிற்றியனார் | பண்படா உள்ளம் |
| 30 | 291 | கபிலர் | பண்படா உள்ளம் |
| 31 | 300 | சிறைக்குடி ஆந்தையார் | பண்படா உள்ளம் |
| 32 | 312 | கபிலர் | பண்படா உள்ளம் |
| 33 | 337 | பொதுக்கயத்துக் கீரந்தை | பண்படா உள்ளம் |
| 34 | 2 | இறையனார் | பண்படா உள்ளம் |
| 35 | 272 | ஒரு சிறைப்பெரியன் | பண்படா உள்ளம் |

**பாலைத்திணை**

| வ. எண் | பாடல் எண் | ஆசிரியர் பெயர் | மனித மன ஆளுமையின் உள்ளமைப்பு நிலை |
|---|---|---|---|
| 1 | 56 | சிறைக்குடி ஆந்தையார் | மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளம் |
| 2 | 63 | உகாயக்கிழார் | தன்முனைப்புள்ளம் |
| 3 | 71 | கருவூர் ஓதஞானி | தன்முனைப்புள்ளம் |
| 4 | 131 | ஓரேருழவனார் | மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளம் |
| 5 | 137 | பெருங்கடுங்கோ | தன்முனைப்புள்ளம் |
| 6 | 147 | கோப்பெருஞ்சோழன் | மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளம் |
| 7 | 151 | தூங்லோரியார் | தன்முனைப்புள்ளம் |
| 8 | 168 | சிறைக்குடி ஆந்தையார் | தன்முனைப்புள்ளம் |
| 9 | 189 | மதுரை ஈழத்துப்பூந்தேவன் | மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளம் |
| 10 | 209 | பெருங்கடுங்கோ | மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளம் |
| 11 | 235 | மாயேண்டன் | மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளம் |
| 12 | 237 | அள்ளூர் நல்முல்லையார் | மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளம் |
| 13 | 250 | இளங்கண்ணன் | மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளம் |
| 14 | 256 | பெயர் குறிப்பிடப்படவில்லை | தன்முனைப்புள்ளம் |

| | | | |
|---|---|---|---|
| 15 | 267 | காலெறி கடிகையார் | தன்முனைப்புள்ளம் |
| 16 | 274 | உருத்தினார் | மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளம் |
| 17 | 347 | சேந்தன் கண்ணன் | தன்முனைப்புள்ளம் |

**முல்லைத்திணை**

| வ. எண் | பாடல் எண் | ஆசிரியர் பெயர் | மனிதமன ஆளுமையின் உள்ளமைப்பு நிலை |
|---|---|---|---|
| 1 | 99 | ஔவையார் | மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளம் |
| 2 | 162 | கருவூர்ப்பவுத்திரன் | மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளம் |
| 3 | 233 | பேயனார் | மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளம் |
| 4 | 270 | பாண்டியன் பன்னாடு தந்தான் | மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளம் |
| 5 | 323 | பதடிவைகலார் | மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளம் |
| 6 | 400 | பேயனார் | மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளம் |

**நெய்தல் திணை**

| வ. எண் | பாடல் எண் | ஆசிரியர் பெயர் | மனித ஆளுமையின் உள்ளமைப்பு நிலை |
|---|---|---|---|
| 1 | 128 | பரணர் | பண்பட்ட உள்ளம் |
| 2 | 184 | ஆரிய அரசன் யாழ்ப்பிரதத்தன் | பண்பட்ட உள்ளம் |
| 3 | 376 | படுமரத்து மோசிக்கொற்றன் | தன்முனைப்புள்ளம் |

**மருதத்திணை**

| வ. எண் | பாடல் எண் | ஆசிரியர் பெயர் | மனித ஆளுமையின் உள்ளமைப்பு நிலை |
|---|---|---|---|
| 1 | 19 | பரணர் | பண்பட்ட உள்ளம் |

**குறுந்தொகையில் தலைவனின் கூற்றுகள் நிகழ் நிலை**

1. தோழி, தலைவி, பாங்கள், பாகன் ஆகியோரிடம் நேர்முகமாகக் கூறுவது
2. தனித்து நிற்கும் தலைவன் நெஞ்சிடம் கூறுவது
3. இயற்கைப் பொருள்களை விளித்துக் கூறுவது.

என்னும் மூன்று சுழல்களில் தலைவனின் கூற்றுகள் நிகழ்கின்றன.

**தோழிக்கு உரைத்தல்**

1. இறந்து பின்நின்ற போது - குறுந்தொகைப்பாடல்கள் 17, 32, 142, 173, 276, 286, 337
2. வினை முற்றிப்பகுந்த போது - குறுந்தொகைப்பாடல்கள் 99, 209

**தலைவிக்கு உரைத்தல்**

1. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த போது - குறுந்தொகைப்பாடல்கள் 137, 2
2. குறிப்பு வேறுபாடு கண்டபோது - குறுந்தொகைப்பாடல்கள் 40,300,256

**பாங்கனுக்கு உரைத்தல்**

1. *பாங்கன் இடித்துரைத்த போது- குறுந்தொகைப்பாடல்கள் 58,132,136,156,184,206, 280,286,272*
2. *தலைவி வேறுபாடு கண்டு பாங்கன் வினவிய போது - குறுந்தொகைப்பாடல்கள் 72,95,100,129*
3. *இயற்கை புணர்ச்சி புணர்ந்து நீங்கிய போது- குறுந்தொகைப்பாடல் 119*
4. *பாங்கனால் குறைமுடிக்கக் கருதிய போது- குறுந்தொகைப்பாடல் 291*

**பாகனுக்கு உரைத்தல்**

1. *வரைவுக்கு முன் வினைமுற்றி மீளும் போது- குறுந்தொகைப்பாடல் 233*
2. *வரைவுக்கு பின் வினைமுற்றி மீளும் போது- குறுந்தொகைப்பாடல் 237,250*
3. *வினை தலை வைக்கப்பட்ட போது- குறுந்தொகைப்பாடல் 189*
4. *வினைமுற்றிப் புகுந்த பின்பு- குறுந்தொகைப்பாடல் 400*

**நெஞ்சிற்கு உரைத்தல்**

1. *தோழியை இரந்து பின் நின்ற போது- குறுந்தொகைப்பாடல்கள் 32,182*
2. *தலைவியை கூடலுற நினைக்கும் போது- குறுந்தொகைப்பாடல்கள் 165,29,222*
3. *புணர்ந்து நீங்கும் போது- குறுந்தொகைப்பாடல்கள் 70,120,142*
4. *உணர்ப்பு வயின் வாரா ஊடலின் போது - குறுந்தொகைப்பாடல்கள் 19,128*
5. *அல்லக்குறிப்பட்டு நீங்கும் போது- குறுந்தொகைப்பாடல்கள் 100, 120,128*
6. *இயற்கைப் புணர்ச்சி பெற்றுப் பிரியும் போது- குறுந்தொகைப்பாடல்கள் 120*
7. *பொருள் வலித்த போது- குறுந்தொகைப்பாடல்கள் 63,71,101,151,168,347,376*
8. *இரவுக்குறிவந்து நீங்குகின்ற போது- குறுந்தொகைப்பாடல் 312*
9. *இரவுக்குறி மறுக்கப்பட்ட போது- குறுந்தொகைப்பாடல்˙ 29*
10. *இடைச்சுரத்து நின்ற போது- குறுந்தொகைப்பாடல் 56*
11. *தோழி இற்செறிப்பு அறிவுறுத்த போது- குறுந்தொகைப்பாடல் 199*
12. *வினை முற்றிய போது*
13. *பருவ வரவு கண்ட விடத்து- 131*

**இயற்கைப் பொருள்களுக்கு உரைத்தல்**

1. *மழையைப் பார்த்து உரைத்தல்- வினைமுற்றிப் புகுந்தபின்பு- குறுந்தொகைப்பாடல் 270 முல்லை- வினைமுற்றி மீளும் போது- குறுந்தொகைப்பாடல் 162*
2. *வாடகைக் காற்று - வினைமுற்றி மீளும் போது (களவில்)- குறுந்தொகைப்பாடல் 235*
3. *கனவு- பிரிந்தவிடத்து கனாக்கண்ட போது- குறுந்தொகைப்பாடல் 147*

**இவ்வாறு பல்வேறுபட்ட சூழல்களில் தலைவனுக்குக் கூற்று நிகழ்கிறது.**

**இக்கூற்றுகளுள்,**

*1. தோழியிடமும், பாங்கனிடமும் தலைவியிடமும் கூறும் கூற்றுகளில் ID என்னும் பண்படா உள்ளச் செயல்பாடு அதிகமாக உள்ளது.*

**சான்று**

***'நல் உரை இகந்து, புல் உரை தாஅய்,***
***மெயல் நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல***
***உள்ளம் தாங்கா வெள்ளம் நீத்தி,***
***அரிது அவாவு அற்றனை- நெஞ்சே! நன்றும்***
***பெரிதால் அம்ம, நின்பூசல், உயர் கோட்டு***
***அகன்உறத் தழீஇ கேட்குநர்ப் பெறினே'***

***(குறுந்-பா-எண்- 29 ப-84)***

*மேற்கண்ட பாடலின் வழியாக, தலைவியின் தழுவுதலைப் பெறுதற்கு விரும்பிய தன் விருப்பத்தை உரைக்கும் தலைவன் ''மகவுடைமந்திபோல்'' என்று உவமிக்கும் திறம் சுவையானது தாயின் அடி வயிற்றோடு அணைத்துப் பற்றிக் கிடக்கும் மந்தி போலத்தலைவியைப் பிரியாது கூடியிருப்பதனை தலைவன் விரும்புகின்றான். தலைவியை விரைந்து வந்து திருமணம் செய்து கொள்ள வேண்டும் எனக்கூறிய தோழியின் நல்லுரையை நினைக்காமல், களவு நீட்டிக்க விரும்புவது தலைவனின் பண்படா உள்ளத்தினை வெளிக்காட்டுகிறது.*

***'தோழியால் வரைவு கடாவப்பட்ட பின்னரும்***
***தலைவன் களவொழுக்கம் வேண்டிக் கூறியது'***

***(தொல்-களவு நூ.எண்.17, ப.183)***

*பொருள் வலித்த தலைவன் நெஞ்சிற்கு சுறும் கூற்றுகளில் நுபழ என்னும் தன்முனைப் புள்ளச் செயல்பாடு அதிகமாக உள்ளது.*

*அதுபோல, திருக்குறளிலும் பண்படா உள்ளத்தின் தன்மையை எடுத்துரைக்கும் குறள் இடம் பெற்றிருப்பதும் நோக்கத்தக்கது.*

***'காலை அரும்பிப் பகல் எல்லாம் போதாகி***
***மாலை மலரும் இந்நோய்'***

***(குறள்- பா.எண்.1227, ப-251)***

*என்னும் குறட்பாவைச் சான்றாகக் கூறலாம்.*

***'ஈதலும் துய்த்தலும் இல்லோர் இல் எனச்***
***செய்வினை கைம்மிக எண்ணுதி அவ்வினைக்கு***
***அம்மா அரிவை வருமோ?***
***எம்மை உய்த்தியோ? உரைத்திசின் - நெஞ்சே'***

***(குறுந்- பா- எண்-63, ப-161)***

*என்னும் பாடலின் வழியாக அறத்தைப் பெறுவதற்காக ஈதலும், இன்பத்தைப் பெறத் துய்த்தலும் ஆகிய காரியங்கள், பொருள் இல்லாத வறியவனிடம் காணப்படுவதில்லை. கொடுத்தலுக்கும், இன்புறுதலுக்கும் அடிப்படையானது பொருளேயாகும். ஆதலில், பொருள் தேடுவதற்குரிய செயல்களை, ஏனையத் தொழில்களை விடச் சிறப்புடையதாக நினைத்தான் தலைவன். இப்பாடல் தலைவியின் இன்பத்தினுடனேயிருக்கும் தேவை எழுந்துள்ளதைப் புலப்படுத்துகிறது. பண்படா உள்ளத்தின் தன்மை மாறிய நிலையில் தலைமகனிடம் தன்*

*முனைப்பு உள்ளத்தின் செயல்பாடு, தோற்றம் பெற்றுள்ளதை இப்பாடல் வழி அறியமுடிகிறது. இதே கருத்து நற்றிணையிலும் இடம்பெறுகிறது.*

**‘இசையும் இன்பமும், ஈதலும் மூன்றும்,**
**அசைவினர் இருந்தோர்க்கு அரும்புணர்வு ஈனம் என’**
***(நற்-பா.எண்.214 ப-393)***

*வினைமுற்றி மீளும் போது பாங்கனிடமும் இயற்கைப் பொருட்களிடத்தும் கூறும் கூற்றுகளில் ஞரிநச நுபழ என்னும் மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளச் செயல்பாடு அதிகமாகவும் காணப்படுகிறது.*

***சான்று***

***‘கரந் தலைப்பட்ட நெல்லி அம் பசுங்காய்***
***மறப்புலிக் குருளை கோள்இடம் கரக்கும்***
***இறப்பு அருங் குன்றம் இறந்த யாமே,***
***குறுநடைப் புள் உள்ளலமே, நெறிமுதல்***
***கடற்றில் கலித்த முடச்சினை வெட்சித்***
***தளை அவிழ் பல்போது கமழும்***
***மைஇடுங் கூந்தல் மடந்தை நட்பே’ (குறுந்-பா.எண்.209,ப-481)***

*என்னும் பாடல் வழியாக,*

*பாலை நிலத்தில் வழிச்செல்வோரின் நீர் வேட்கையைத் தணிப்பதற்குக் கிடைத்த நெல்லி மரத்தின் அழகிய பசிய காய்கள், வலிமையுடைய புலியின் குட்டிகள் கொள்ளுதற்கு உரிய இடத்தில் உதிர்ந்து கிடக்கும். அத்தகைய கடத்தற்கரிய மலைகளைக் கடந்து சென்ற நாம், குறிய நடையையுடைய பறவைகளின் இடர்பாடுகளை நினைக்கவில்லை. அவ்விழிகளில், காட்டின்கண் தழைத்த, வளைந்த கிளைகளையுடைய வெட்சியின் பேரரும்புகள் பலவற்றின் மனம் கமழுகின்ற, மேகம் போன்ற கரிய கூந்தலையுடைய மடந்தையின் நட்பினையே நினைத்திருந்தேன் எனத் தோழியிடம் கூறுவது தலைவனின் மேம்பாட்டுள்ளத்தின் செயல்பாட்டினை வெளிக்காட்டுகிறது.*

***‘நெடுஞ்சேண் வந்த நீர்நசை வம்பலர்***
***செல்உயிர் நிறுத்த சுலைக்காய் நெல்லி’***
***(அகம்-பா.எண்-271,ப-810)***

*என்று இச்செயல்பாடு அகநானூற்றிலும் காணப்படுகிறது.*

**இதனையே திணைவழி நோக்கும் போது**

1. *குறிஞ்சி, மருதம், நெய்தல் திணைப் பாடல்களில் -* ID *என்னும் பண்படா உள்ளச்செயல்பாடு அதிகமாகவும்*
2. *பாலைத்திணைப்பாடல்களில் -* Ego *- என்னும் தன்முனைப்புள்ளமும்* Super Ego *என்னும் மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளமும் அதிகமாகவும்,*
3. *முல்லை, பாலைத்திணைப்பாடல்களில் -* Super Ego *என்னும் பண்பும் அதிகமாக காணப்படுகிறது.*

ID *என்னும் பண்படா உள்ளமும்,* Ego *என்னும் தன்முனைப்புள்ளமும்,* Super Ego *என்னும் மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புள்ளமும் இணைந்து செயலாற்றினால் தான் ஆளுமைச்சமநிலை ஏற்படும். பிராய்டு கூறும் மூவகை உள்ளமும் இணைந்து செயல்படுவதே இசைவான ஆளுமை எனப்படுகிறது. குறுந்தொகைத் தலைவன் கூற்றுகளில் இடம் பெற்றுள்ள தலைவனின் செயல்பாடுகள் இசைவான ஆளுமைத்தன்மையைப் பெற்றுச் செயல்படுகிறது.*

**நிறைவுரை**

*இட் என்ற பண்படா உள்ளத்துப் பாலுணர்வாற்றல் தலைவியிடம் பெறும் இன்பத்தை உடனே அடையும் படி தலைவனைத் தூண்டுகிறது. நுபழ என்னும் தன்முனைப்புள்ள செயல்பாடு. தலைவனின் பொருட்பிரிவைக் கட்டுப்படுத்த முனைகிறது. மேலும் தலைவியின் பிரிவுத்துயரைக் காரணப்படுத்தி செலவை தவிர்க்கிறது. தலைவனின் மேம்பாட்டுள்ளம் அவனது வாழ்வின் அறநெறிகளை உணர்த்தி அவனை போராட்ட மனநிலையிலிருந்து விடுவித்து சமநிலைப்படுத்துகிறது என்னும் கருத்தாக்கங்கள் குறுந்தொகை தலைவனின் இசைவான ஆளுமைத்தன்மைக்கு வலு சேர்க்கும் காரணிகளாயுள்ளன.*

**துணைநூற்பட்டியல்**

**முதன்மை நூல்**

1. *வி.நாகராசன் (2004), குறுந்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி.லிட்,41,பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை- 600 098.*

**துணைமை நூல்கள்**

1. *கௌமாரிஸ்வரி (2005), தொல்காப்பியம் கௌரா ஏஜென்ஸிஸ், 6ஃ16இ தோப்பு வெங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை- 600 005.*
2. *செயபால்.இரா (2004), அகநானூறு மூலமும் உரையும் நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்(பி)லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை- 600 098.*
3. *பாலசுப்பிரமணியம்.சி (1959), தமிழ் இலக்கிய வரலாறு, மாணவர் பதிப்பகம், சென்னை- 29.*
4. *வரதராசனார் (1949), திருக்குறள் அப்பர் அச்சம் சென்னை- 108.*
5. *பாலசுப்ரமணியம் கு.வெ. (2004), நற்றிணை மூலமும், உரையும் நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை- 600 098.*

**References**

1. *Nagarajan, V., Kurunthogai Moolamum Uraiyum, New Century Book House, Pvt. Lit., 41, B., SIDCO Industrial Estate, Ambattur, Chennai- 600 098, 2004.*
2. *Gowmariswari, Tholkappiyam Goura Agencies, 6/16, Thoppu Venkatachalam Street, Triplicane, Chennai- 600 005, 2005.*
3. *Seiyapal.R., Akananuru Moolamum Uriyium, New Century Book House Pvt. Ltd., 41-B, SIDCO Industrial Estate, Ambattur, Chennai- 600 098, 2004.*
4. *Balasubramaniyam, C., Tamil Ilakiya Varalaru, Manavar Pathipagam, Chennai- 29, 1959.*
5. *Varadarasanar, Thirukkural, Appar Achagam, Chennai- 108, 1949.*
6. *Balasubramaniyam, K.V., Natrinai Moolamum Uriyum, New Century Book House Pvt. Ltd., 41-B, SIDCO Industrial Estate, Ambattur, Chennai- 600 098, 2004.*